# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| **STC** | 977 | 2018 | |
| சா.ப. எண் | | சாட்சியின் பெயர்: | வயது |
| 1 | | அழகியண்ணன் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | அழகியண கவுண்டர் | |
| முகவரி: | | | |
| **Religion / Caste** : | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 05.05.2026

புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை

**1)** நான் சத்திரப்பட்டியில் உள்ள கோபாலபுர கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாய சங்க தலைவராக உள்ளேன். எனக்கு இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் சட்டம் படித்து முடித்துவிட்டு தற்போது வழக்கறிஞராக பயிற்சி செய்து வருகிறார். எனது இளைய மகள் பொறியியல் பட்ட படிப்பு முடித்துவிட்டு தற்போது சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். நான் இந்த வழக்கை சத்திரப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வந்த கலைவாணி என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன். எனது ஊரான கோபால்புரத்தைச் சேர்ந்த மளிகைகடை வைத்திருக்கும் கனகராஜும் அவரது மனைவி லலிதாவும் சீட்டு நடத்தி வந்தார்கள். எனது இரு மகள்களின் படிப்பு செலவிற்காக நான் மேலே சொன்ன கனகராஜ் மற்றும் அவரது மனைவி லலிதா நடத்தும் சீட்டில் ரூ.70,000/— சீட்டு போட்டு இருந்தேன். என்னிடம் காட்டப்படும் கையால் எழுதப்பட்ட கனகராஜ் எழுதிய சீட்டு பணம் வரவு அட்டை

**பு.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது மகள்களின் கல்லூரி கட்டணத்திற்காக நான் போட்டிருந்த சீட்டு பணத்தை கொடுக்கும்படியாக இரண்டு மாதத்திற்கு முன்னதாகவே அவர்களிடம் சொல்லியிருந்தேன். கனகராஜும் லலிதாவும் சீட்டு பணத்தை கொடுத்துவிடுவதாக சொல்லி இரண்டு மாதம் கால அவகாசம் கேட்டு இருந்தார்கள். நானும் சீட்டு பணம் எடுப்பதற்காக காத்துக் கொண்டிருந்தேன். அப்படி இருக்கையில் கடந்த 16.07.2013 ஆம் தேதியன்று இரவு 9.00 மணி அளவில் கனகராஜும் லலிதாவும் அவர்கள் வைத்திருக்கும் கடையை காலி செய்துவிட்டு ஊரை விட்டு போவதாக எனக்கு தகவல் கிடைத்தது. நானும் என்னை போல் அவரிடம் சீட்டு போட்ட அனைவரும் சேர்ந்து கனகராஜிடமும் லலிதாவிடமும் எங்களது சீட்டு பணத்தை கொடுக்கும்படியாக கேட்டோம். அவர்கள் மேலும் என்னிடமும் என்னுடன் வந்தவர்களிடமும் கால அவகாசம் கேட்டதால் நாங்கள் அனைவரும் சேர்ந்து சத்திரப்பட்டி காவல் நிலையம் சென்று அங்கு இருந்த சார்பு ஆய்வாளர் கலைவாணி அவர்களிடம் புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் நகல் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனுவின் நகல் பு.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) என்னிடம் புகாரைப் பெற்றுக்கொண்டு சார்பு ஆய்வாளர் கலைவாணி அவர்கள் என்னையும் என்னைப்போல் சீட்டு போட்டு காவல் நிலையம் வந்திருந்த அனைவரையும் கனகராஜ் லலிதா ஆகியோரின் கடைக்கு எதிர்புறமாக நிற்க சொன்னார். அப்போது இரவு 10.00 மணி இருக்கும். நானும் என்னுடன் சீட்டு போட்டு இருந்தவர்களும் கனகராஜ், லலிதா ஆகியோரின் கடைக்கு எதிர்புறமாக நின்றிருந்தோம். அங்கே வந்த சார்பு ஆய்வாளர் கலைவாணி " எவண்டா அழகியண்ணன் " என்று கேட்டார். நான் அதற்கு நான்தான் அழகியண்ணன் என்று சொன்னேன். நான் சொன்ன உடனே அவர் எனது சட்டையின் கழுத்து பகுதியை பிடித்து "எவண்டா தேவிடியா மகனே" என்றும் அச்சில் ஏற்ற முடியாத கெட்ட வார்த்தைகளால் பேசி என் கன்னத்தில் மாறி மாறி அரைந்தார். அதன் பின்னர் என் சட்டையைப் பிடித்து இழுத்து கிழித்துவிட்டார். மேலும் சார்பு ஆய்வாளர் கலைவாணி "என்னைய கேட்டா கனகராஜ், லலிதாவிடம் சீட்டு போட்ட அவனையெல்லாம் ஒன்னும் புடுங்க முடியாது" என்றும் கனகராஜ், லலிதாவிடம் திரும்பவும் காசு கேட்டால் என் மீது

பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளி விடுவேன் என்று என்னை மிரட்டினார். சார்பு ஆய்வாளர் கலைவாணி என்னை அடித்ததில் எனக்கு மிகவும் பதட்டமாகவும், அத்தனை பேர் முன்னிலையில் என்னை அடித்ததால் எனக்கு மிகவும் அவமானமாகவும், மன உளைச்சலாகவும் இருந்தது. சார்பு ஆய்வாளர் கலைவாணி என்னை அடித்ததை கோபால் த/பெ.பழனிச்சாமி, காமராஜ் த/பெ.அய்யாச்சாமி தாசாரிபட்டியை சார்ந்தவர். சுப்பிரமணி த/பெ.செல்லப்ப கவுண்டர், சரவணன் த/பெ. வேலுச்சாமி ஆகியோர் நேரடியாக பார்த்தார்கள்.

3) இதை அடுத்து சார்பு ஆய்வாளர் கலைவாணியின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும், தமிழ்நாடு காவல் துறை இயக்குநருக்கும் பதிவு தபால் மூலமாக கடந்த 17.07.2013 ஆம் தேதியன்று எனது புகாரை அனுப்பி வைத்தேன். திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட புகாரின் நகல் அஞ்சலக ரசீதுடன் **பு.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகாரை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **பு.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட புகாரின் நகல் அஞ்சலக ரசீதுடன் **பு.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகாரைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை **பு.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் அனுப்பிய புகாரின் பேரில் எதிரியின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4) அதன் பின்னரும் சார்பு ஆய்வாளர் கலைவாணி நேரடியாகவும் மறைமுகமாகவும் என்னை பலமுறை மிரட்டி வந்தார். நான் என் வீட்டிலிருந்து வேறெங்கு செல்ல வேண்டும் என்றாலும் சத்திரப்பட்டி காவல் நிலையம் வழியாகத்தான் செல்ல வேண்டும். நான் போகும்போது ஒழுங்காக இருந்துக்கோ இல்லைனா உன்னை பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளி விடுவேன் என்று நேரடியாக மிரட்டியும், எனக்கு தெரிந்தவர்கள் மூலமாக சொல்லி அனுப்பியும் என்னை துன்புறுத்தி வந்தார். அதேபோல் எனக்கு சம்மந்தமே இல்லாத வழக்கில் என்னையும் இந்த வழக்கின் சாட்சிகளையும் சேர்த்து பொய்யாக வழக்கு புனைந்து மாண்பமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். என் மீது பொய்யாக புனையப்பட்டிருந்த வழக்கில் முழு விசாரணை முடிந்து இந்நீதிமன்றத்தால் நான் விடுதலை செய்யப்பட்டேன். என்னை நேரடியாகவும்,

**மறைமுகமாகவும் அச்சுறுத்தி மிரட்டி வந்த சார்பு ஆய்வாளர் கலைவாணி அவர்கள் மீது தக்க நடவடிக்கை வேண்டியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணையின் போது ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.**

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட் சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.05 17:36:53 +0530

Judicial Magistrate
Oddanchatram.Date : 05.05.2026